# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, ஹெல ஹுவுல (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1992, ஆகஸ்ட் மாதம் 10 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


*1992, ஆகஸ்ட் மாதம் 14 ஆந் தேதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

1992 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, ஹெல ஹவுல (கூட்டிணைத்தல்) சட்டம்

[1992, ஆகஸ்ட் மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 42/87

**ஹெல ஹவுலவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்.**

"ஹெல ஹவுல" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒழுங்கமைப்பொன்று, அதன் உறுப்பினர்களினால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட ஒழுங்கமைப்புடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, அத்துல்கோட்டே, கொட்டுபெம்ம வீதி, 49 ஆம் இலக்கத்தில் இதன்முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட ஒழுங்கமைப்பு எக்குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அக்குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுகாலவரையும் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, ஹெல ஹவுல (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்), ஹெல ஹவுலவின் உறுப்பினர்களாக இப்போதுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படக்கூடிய அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஹெல ஹவுல" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறு வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியவாறு அவ்விலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாதலும் வேண்டும். ஹெல ஹவுலவைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) சிங்கள மொழியையும், இலக்கியத்தையும், பண்பாட்டையும் மேம்படுத்தலும் அபிவிருத்திசெய்தலும் ;

(ஆ) சிங்கள மக்களின் உரிமைகளையும் அக்கறைகளையும் பாதுகாத்தல் ;

(இ) தேசிய, சர்வதேச மட்டத்தில் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஒழுங்குபடுத்துதலும் நடாத்துதலும் ;

(ஈ) மொழிகளிலான ஆராய்ச்சியை மேம்படுத்தலும் இலக்கிய ஆக்கங்களை வெளிப்பரப்புதலும்;

(உ) சிங்கள மக்களிடையே ஒற்றுமையை வளர்த்தலும் பாரம்பரிய ஆன்மீக மதிப்புத்தரங்களின் பரப்புதலை ஊக்குவித்தலும்; அத்துடன்

(ஊ) மேற்படி குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு உகந்தனவான அல்லது இடைநேர் விளைவான அத்தகைய வேறு செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.**

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும்,புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக்கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையில் அமர்த்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பனவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

**மத்தியகுழு.**

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைவாக, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையைக் கொண்டதும், அதற்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்டதுமான உறுப்பினர்களைக் கொண்ட மத்திய குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது மத்திய குழுவானது, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்தவர்களான, ஒழுங்கமைப்பின் மத்திய குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் விதிகள்.**

6. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமூகமளித்து வாக்களிப்பதற்கு உரித்துடையவராகவுள்ள உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை கொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது ஏதேனும் கருமம் தொடர்பிலும், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்திற்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

(அ) உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளல், வகுப்பாக்கம் செய்தல், மீளப்பெறுதல், அல்லது வெளியேற்றுதலும், அவர்களின் உறுப்பாண்மைக் கட்டணங்களும்;

(ஆ) மத்திய குழுவுக்கும், வேறுபல உபகுழுக்களுக்குமான தேர்தலின் விதமும், அதன் உறுப்பினர்கள் பதவியிலிருந்து விலகுதல், பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் என்பனவும் அவர்களது தத்துவங்கள், நடத்தை அத்துடன் கடமைகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரைத் தேர்ந்தெடுத்தல், அல்லது அவர்களின் நியமனம், என்பனவும் அவர்களது தத்துவங்கள், நடத்தை, கடமைகள் அத்துடன் பணிகள் என்பன ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் மத்திய குழுவின் அத்துடன் வேறு பல உபகுழுக்களின் கூட்டங்களைக் கூட்டுதல், நடாத்துதல், அத்தகைய கூட்டங்களின் நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள் அத்துடன் நிகழ்ச்சிகள் அதன் கூட்ட நடப்பெண், அவற்றின் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் என்பவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை ;

(உ) கூட்டுத்தாபனத்தின் பொறுப்பின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணிவருதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(ஊ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப் போன்ற அதே விதத்தில் மாற்றப்படலாம், சேர்த்துக்கொள்ளப்படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும், அப்போதைக்கு வலுவிலிருக்கின்ற விதிகளுக்கு அமைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

ஒழுங்கமைப்புக்குப்போமதியானவையும் அதனால் கொடுபடற்பாலனவுமான தனிசுகள்.

7. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ள எல்லாத் தனிசுகளும் அத்துடன் பொறுப்புக்களும், கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் ஒழுங்மைப்புக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும், அதற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் அத்துடன் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அதற்கு உரித்தாக வரக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும், வைத்திருக்கவும் சட்டப்படி போதுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை பொறிக்கப்படுவதற்கான நடைமுறை.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது மத்தியகுழு காலத்திற்குக் காலம் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய ஆட்களின் முன்னிலையில் அல்லாமல் எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது ; அவர்கள் சமூகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், அல்லது இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கிநிற்றல்.

11. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.